

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர். திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின்118. வதுபிறந்த நாளை யொட்டி அவருடைய திருஉருவ சிலைக்கு ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன் .மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் பேரூர் செயலாளர். என் எஸ். பாரி வள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர். பொன். சசிகுமார் துணைத்தலைவர். திருமதி . இளமதி கோவிந்தராஜ். உள்ளிட்ட ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### த.வெ.க. ஆட்சியில் புதுக்கோட்டை அரிமளம்

# நெல் கொள்முதல் நிலையம் கொள்ளையர்களின் கூடாரமாகி விட்டது!

## விவசாயிகள் வேதனை! போராட்டம் நடத்த முடிவு!

புதுக்கோட்டை, செப்.17 –

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, அரிமளம் சுற்று வட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாய பெருங்குடி மக்கள் மிகுந்த மனவேதனைக்கு ஆளாகி இருந்த வேலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் நல்லாட்சி அமைந்தது அப்போது அரிமழம் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் கேரள மாநில திராவிட மு ன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் அவர்கள் மூலமாக அன்றைய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

விவசாயிகள் படும் துயரத்தை கேரள மாநில அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் அமைச்சர் ரகுபதி அவர்களிடம் எடுத்துக் கூறி உடனடியாக நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்த நிமிடமே உத்தரவு பிறப்பித்து ஒரு வாரத்திற்குள் நெல் கொள்முதல் நிலையம் திறக்க ப்பட்டது. அரிமழம் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த நிலை கடந்த 5 ஆண்டுகள் நீடித்தது.இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் நெல் கொள்முதல் நிலையம் கொள்ளையர்கள் கூடாரமாக மாறிவிட்டது.அதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அரிமளம் சத்திரம் நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும்போது, ஒரு மூட்டைக்கு 46 வீதம் பணம் வசூலிக்கப்படுவதாகவும், மேலும் எடை போடும் முறையிலும் நெல் சிதறல்/குறைவு தொடர்பாகவும் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் விவசாயிகள் தரப்பில் புகார் உள்ளது.

நெல் மூட்டைகளை 42 கிலோ அளவில் எடை இயந்திரத்தில் வைத்து எடை எடுத்த பின்னர், கப்பு அல்லது கையால் நெல்லை அள்ளி(சுமார் 2,3 கிலோ)கீழே போடுகின்றனர், அவ்வாறு கீழே சிந்தும் நெல்லை தனியாக சேகரித்து மீண்டும் ஒரு மூட்டையாக கணக்கிட்டு, விவசாயியின் நெல்லுடன் சேர்த்து லோடுமேன் மற்றும் அலுவலர்கள் பிரித்துக் கொள்கின்றனர்.

மேலும், சம்பந்தப்பட்ட DPC இணையதளத்தில் காணப்பட்ட கணக்கின்படி, இத்தடவை 23,140 மூட்டை நெல் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டதாக பதிவாகியுள்ளது.

23,140 மூட்டைகளுக்கு ஒரு மூட்டைக்கு 46 என்ற அடிப்படையில்:

$23,140 \times 46 = 10,64,440$

என மொத்தத் தொகை வருகிறது.

மேலும், ஒரு மூட்டைக்கு சுமார் 3.5 கிலோ நெல் இவ்வாறு சிதறல்/குறைவு ஏற்படுவதாகக் கணக்கிட்டால்:

$23,140 \times 3.5$ கிலோ $= 80,990$ கிலோ கணக்கில் இல்லாமல் கொள்ளையடிக்கப்படுகிறது. ஒரு கிலோ நெல்லின் மதிப்பு 25 எனக் கணக்கிட்டால்:

$80990 \times 25 = 20,24,750.00$

என்ற அளவிற்கு நெல் மதிப்பு வருகிறது.இந்த தொகை சம்பந்தப்பட்ட அமைச்சர் வரை செல்கிறது என்று கூறுகிறார்கள்.

மேற்கண்ட தொகைகள் மற்றும் நெல் அளவு தொடர்பாக உரிய பதிவுகள், DPC கணக்குகள், எடை இயந்திரப் பதிவுகள், கொள்முதல் பதிவுகள், விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்ட தொகைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் கணக்குகள் ஆகியவற்றை அதிகாரிகள் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இந்த முறைகேட்டினால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு உரிய பணம்/நெல் மதிப்பு கிடைக்காமல் போகும் நிலை ஏற்படுகிறது. எனவே விவசாயிக ளின் நலனை கருத்தில் கொண்டு இந்தப் புகாரை உடனடியாக விசார ணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடம் லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் அமலாக்கத்துறை உரிய விசாரணை நடத்தி சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.என்று அரிமளம் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1. அரிமளம் சத்திரம் நெல் கொள்முதல் நிலையத்தில் நடைபெற்ற கொள்முதல் தொடர்பான முழு கணக்கையும் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்.

2. DPC இணையதளத்தில் பதிவாகியுள்ள 23,140 மூட்டை கொள்முதல் விவரங்களை சரிபார்க்க வேண்டும்.

3.விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டதாக கூறப்படும் மூட்டை ஒன்றுக்கு 46 தொகை குறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும்.

4. எடை இயந்திரத்தின் அளவீடு, எடைப் பதிவுகள் மற்றும் கொள்முதல் பதிவுகளை சரிபார்க்க வேண்டும்.

5. எடை போட்ட பின்னர் கீழே சிந்தும்/அள்ளப்படும் நெல்லை தனியாக சேகரித்து கணக்கில் எடுத்துக்கொள்வது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்.

6. விவசாயிகளிடம் இருந்து சட்டவிரோதமாக அல்லது விதிமுறைக்கு புறம்பாக ஏதேனும் தொகை வசூலிக்கப்பட்டிருந்தால், அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. முறைகேட்டின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கணக்கிட்டு, உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. விசாரணை முடிவில் முறைகேடு உறுதி செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்/பணியாளர்கள் மீது விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. இந்தப் புகார் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் அமலாக்கத்துறை ஆகிய அமைப்புகள் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப் பெரிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி படப்பை பஜார் வீதியில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு படப்பை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு படப்பை.ஆ. மனோகரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் குன்றத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் சி பார்த்தசாரதி, குமுதா சுமன், டி.லோகநாதன், என் வாசு, ஊராட்சி மன்ற தலைவர் எஸ் கர்ணன் துணைத் தலைவர் ஏடிஎம் வினோத் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் க.பா.ஆடலரசு, மாணவர் அணி துணை அமைப்பாளர் ஜே கோகுலநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பேராவூரணி மிசா மு. கிருட்டிணமூர்த்தி**
**செப்டம்பர் 17 (2003)**



கழகத்தின் ஆரம்ப கால அமைப்புகளில் வட்டச் செயலாளராக பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஓராண்டு காலம் மிசா கைதியாகவும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு மற்றும் திருநின்றவூர் நகர திமுக சார்பில் மறுசீரமைப்பு தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக மற்றும் நகர கழக செயலாளர்கள் என்.இ.கே.மூர்த்தி , தி.வை.ரவி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு மறுசீரமைப்பு பணிக்கான ஆலோசனைகளை வழங்கி அதற்கான படிவத்தை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நகர பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கையில் இரட்டை கொலை:

# தமிழ்நாடு அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிறது!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!

சென்னை,செப்.17-

நேற்று ராமநாதபுரத்தில் இரட்டை கொலை, இன்று சிவகங்கையில் இரட்டை கொலை என தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு கேடுகெட்டு போயுள்ளது. முதலமைச்சரோ தனது சொகுசு சுற்றுலாவில் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

ஒரு பக்கம் மின்வெட்டு, அரசு மருத்துவமனையின் அவலம், அரசு துறையில் லஞ்சம், ஊழல், சட்ட ஒழுங்கில் தினம் ஒரு இரட்டை கொலை என தமிழ்நாடு அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் தன் நிர்வாக சீர்கேட்டால் தமிழ்நாட்டை பல ஆண்டுகள் பின்னோக்கி இழுத்து சென்றுவிட்டது இந்த மானம்கெட்ட மாற்றத்தின் ஆட்சி.




# தேனி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிக்கை!

தேனி, செப். 17 -

தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (18.09.2026 - வெள்ளிக்கிழமை), காலை 10.00 மணிக்கு உத்தமபாளையம் ஸ்டார் கம்யூனிட்டி ஹாலில் மாவட்ட அவைத்தலைவர் த.மனோகரன் தலைமையில், தலைமைக்கழகப் பிரதிநிதிகள் சுபா.சந்திரசேகர், கவிஞர் காசிமுத்து மாணிக்கம் ஆகியோர்களது முன்னிலையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் மாநில நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்,

பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இச்செயற்குழு கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) 06.09.2026ம் தேதியில் நடைபெற்ற தேனி தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையொட்டி வரையறை செய்தல்.

2) கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஜெ.நடராஜன் – துர்காதேவி நடராஜன் எம்.சி. ஏற்பாட்டில்!

# தந்தை பெரியார் பிறந்தநாள் விழா! கழக கொடியேற்றி - உறுதிமொழி!

## ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை,செப்.17-

தந்தை பெரியார் அவர்களின் 148- வது பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான, தா. மோ. அன்பரசன் அறிவுறுத்தலின்படி, 167-வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன் ஏற்பாட்டில், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12-வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன் (எனது) முன்னிலையில், இன்று 17.09.2026 வியாழக்கிழமை காலை 7.00 மணி அளவில் எம்.ஜி.ஆர்.ரோட்டில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, உறுதிமொழி ஏற்று, இனிப்பு வழங்கி சிறப்பிக்க இருப்பதால்,

ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக் குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், மூத்த கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கே ,கருணாகரன் தலைமையில் எஸ், பாலாஜி, சி,மூர்த்தி, எம், என், அஜய் தென்னவன்,கே, சண்முகபிரியன்,டி, திவாகர் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி வடபெரும்பாக்கத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## புழல் எம், நாராயணன் – நிர்வாகிகள் பங்கேற்பு!

மாதவரம்,செப்.17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பேரறிஞர் பெருந்தகை அறிவுலக மேதை அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதி அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் வட்ட நிர்வாகிகள் எஸ். பாலாஜி, வி.மூர்த்தி, பகுதியில் இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன்,0 கழக முன்னோடி வடபெரும்பாக்கம் ஜி.குப்பாராவ், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ் சிவக்குமார், பாக முகவர் டி. திவாகர், வி. சுமீர் முன்னிலையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து அண்ணாவின் புகழ் ஓங்குக என்று கோஷங்கள் எழுப்பி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் அரியலூர் டி. வினோத், எஸ். நாகராஜ், கே ராஜ்குமார் இ. சுதர்சன், ஜி. பூபாலன், எம். ஜான்சன், காந்திநகர் சுந்தரம், தியாகி விஸ்வநாததாஸ் நகர் சுரேஷ், கார்த்திக், ராகேஷ், வட பெரும்பாக்கம் எம். மைக்கேல்,இ. கார்த்திக், பி. செந்தில், எம். கோவிந்தன், சின்ன தோப்பு முனிவேல், விநாயகபுரம் கமலநாதன், வழக்கறிஞர் எம். என் தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்



கழக முப்பெரும் விழா,பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு, 78 அ வட்டம் சார்பில் வட்டச் செயலாளர் ந.பாலு தலைமையில் பகுதி செயலாளர் சொ.வேலு, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி 400 பேருக்கு உணவு மற்றும் இனிப்பு வழங்கினார்கள்.உடன் தில்லை குமார் சூளை சுப்புராயலு, முரளிதரன், நாராயணன், மனோகர்,ஜான்சி, ராஜேந்திரன், குணசேகரன், தமிழ்ச்செல்வன், பாலாஜி, மதிவாணன், நதியா,ரீட்டா, ஏ. சீனிவாசன், தனுஷ், விஜயகுமார், ஆர்.சீனிவாசன், சசிகுமார்,பாலா, பிரேமா,மோகன், மனோஜ், மனோகரன், சிவராஜ்,ராமு, சந்தோஷ் மணி, ஏழுமலை,லோகு, சத்யா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.